# தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை

படிவம் - 41

ஆணை எண். – 250 (3)

ஒ.மு. .எண்:7553/ஆ1/2023
நாள். .08.2023
தீ உரிமம் எண்: 312 /2023

மாவட்ட அலுவலர் அலுவலகம்,
தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை,
திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.

## தடையின்மைச் சான்று

பொருள்: தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை - திருவாரூர் மாவட்டம் - தீ இன்னல்களுக்கு உள்ளாகக்கூடிய இடங்களையும், வணிகங்களையும் பயன்படுத்துதல் - தடையின்மைச் சான்றிதழ் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:
1. முதல்வர், பிரிலியண்ட் கல்வியியல் கல்லூரி கடித எண்:BCE/Fire Service Dept./2023/20, நாள்:17.07.2023
2. 28.07.2023 நாளிட்ட திருத்துறைப்பூண்டி நிலைய அலுவலரின் ஆய்வறிக்கை ந.க. எண்:228/V/2023 உடன் பெறப்பட்ட இணைப்புகள்.

*********

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், பருத்திசேரி, மணலி கிராமம், புல எண்:153/4, 153/5,7,8, 154/14, 153/15, 154/16B1 & 154/16B2 என்ற முகவரியில் இயங்கி வரும் **தி/கள் பிரிலியண்ட் கல்வியியல் கல்லூரி** (Brilliant college of Education) செயல்பட தடையின்மைச் சான்று கோரிய இடத்தினை **திருத்துறைப்பூண்டி நிலைய அலுவலரால்** 27.07.2023 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

எனவே, மேற்படி முகவரியில் உள்ள இடத்தில் **தி/கள் பிரிலியண்ட் கல்வியியல் கல்லூரி** (Brilliant college of Education) செயல்பட பின்பக்கம் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தீயணைப்புத்துறை நோக்கில் தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

அலுவலக முத்திரை:

மாவட்ட அலுவலர் அலுவலகம் 02 AUG 2023 தீயணைப்பு மீட்பு பணிகள், திருவாரூர்

மாவட்ட அலுவலர்,
தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை,
தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
(மு.கூ.பொ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.

2/8/23

பெறுநர்:

முதல்வர்,
பிரிலியண்ட் கல்வியியல் கல்லூரி,
(Brilliant college of Education)
பருத்திசேரி, மணலி கிராமம்,
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.

நகல்: துணை இயக்குநர், மத்திய மண்டலம்,
திருச்சிராப்பள்ளி.

## நிபந்தனைகள்

1. இந்திய தரக்கட்டுப்பாடு 2190/2010-ன்படி, தீயணைப்பு கருவிகள் மறு நிரப்பம் செய்து சரியான இடத்தில் பொருத்தப்பட வேண்டும்.
2. தேசிய கட்டட குறியீடு 2016-ன்படி, அனைத்து நிலையான நிறுவல்கள் சரியாக பராமரிக்கப்பட வேண்டும்.
3. தீயணைப்பு கருவி பராமரிப்பு பதிவேடு மற்றும் மதிப்பெண் பதிவேடு முறையே படிவம் I & II -இன்படி பராமரிக்கப்பட்ட வேண்டும்.
4. போலி ஒத்திகைப் பயிற்சி (Mock Drill) ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட வேண்டும்.
5. தீயணைப்பு துறை ஊழியர்கள் மூலம் தீ அணைக்கும் போலி ஒத்திகைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
6. தீயணைப்பு-மீட்புப் பணிகள் நிலையத்தின் தொலைபேசி எண் அடங்கிய பலகை வளாகத்தில் வைக்கப்பட வேண்டும்.
7. வளாகம் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும்.
8. தீயணைப்பு ஊர்திகள் அக்கட்டிடத்திற்குள் தங்குதடையின்றி நுழையத்தக்க வகையில் அதன் பிரதான வாயில் 5 மீட்டர் உயரத்திற்கு, 4.5 மீட்டர் அகலத்திற்கும் குறையாமல் இருத்தல் வேண்டும்.
9. **இச்சான்று ஓர் ஆண்டிற்கு மட்டுமே செல்ல தக்கதாகும்.**
10. **"தீ" (or) "FIRE"** செயலியை பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.
11. BIS 12459:1988 –இன் பிரிவு 3.2-க்கு இணங்க கேபிள்களை ஒழுங்குபடுத்துவதில் தீ பாதுகாப்பான நடைமுறைக் குறியீட்டின்படி, 1 மீட்டர் அளவிற்கு வெளிப்படையான தீ தடுப்பு பூச்சு அனைத்து மின் கேபிள்களின் இருமுனைகளிலும் மேற்கொள்ளவும், ஒவ்வொரு மின் பேனலிலிருந்தும் விநியோகப் பெட்டிகளில் கேபிள்கள் இணைத்து பொருத்தப்பட வேண்டும்.
12. பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு சாதனங்களை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அலுவலர்,
தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை,
தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
(மு.கூ.பொ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.